DHINAMADHI-28-NOV-2010

# தி.மலையில் ஈஷா சத்சங்கம் ஜகிவாசுதேவ் ஆன்மீக உரை



திருவண்ணாமலை,நவ.28- திருவண்ணாமலையில் நேற்று ஈஷாயோகா சார்பில் நடைபெற்ற ஆனந்தஅலை மகாசத்சங்கம் நிகழ்ச்சியில் ஜகிவாசுதேவ் கலந்து கொண்டு ஆன்மீக உரையாற்றினார்.

ஈஷா அறக்கட்டளை சார்பில் கடந்த செப்டம்பர் மாதம் 26ம்தேதி முதல் தமிழகம் முழுவதும் தொடர்ச்சியாக 16 மகா சத்சங்கங்கள் நடைபெற்று வருகிறது. மேலும் தமிழகத்தில் பசுமைப்பரப்பை 33 சதவிகிதமாக அதிகரிக்க ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையில் ஈஷா யோகா அறக்கட்டளை சார்பில் ஆனந்தஅலை மகா சத்சங்கம் நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை நகராட்சி ஆண்கள் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் ஜேபிஎ குருப்ஸ் சேர்மன் எம்.இ. ஜமாலுதீன், நகரமன்றத்தலைவர் இரா.திருமகன், சிவா எலக்ட்ரானிக்ஸ் உரிமையாளர் சிவஞானம், எஸ்கேபி பொறியியல் கல்லூரி சேர்மன் கு.கருணாநிதி, அருணை பொறியியல் கல்லூரி நிர்வாக இயக்குநர் எ.வ.கம்பன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் ஈஷாயோக அறக்கட்டளை நிறுவனர் ஜகிவாசுதேவ் கலந்துகொண்டு முதல் மரக்கன்றினை நட்டு பசுமை திருவண்ணாமலை இயக்கத்தை துவக்கிவைத்தார். கூட்டு தியானங்களும் நடைபெற்றது. பொதுமக்களின் கேள்விகளுக்கும் ஜகிவாசுதேவ் பதிலளித்தார்.

ஈஷா இசைக்குழுவினரின் இன்னிசையும், ஈஷா தொடர்பான புகைப்பட கண்காட்சியும் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானோருக்கு வளர்ந்த மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.